SRI RAMACHANDRA MEDICAL CENTRE
NEWS RELEASE
Porur, Chennai-600 116. Telefax : 044-23860217. www.sriramachandra.edu.in

# CENTRE OF EXCELLENCE IN ENDOSCOPIC AND MINIMALLY INVASIVE SURGERY AT SRMC

Chennai,
20th November 2018.

Sri Ramachandra Medical Centre has set up a Centre of Excellence in Endoscopic and Minimally Invasive Surgery. Inaugurating it here today Dr. Tapan Daftari, Co-Chairman, Spine Surgery, Well Kennistone Hospital, Atlanta, Georgia, USA said minimally invasive spine surgery now widely done in the west provides the needed relief to the patient with the least damage to tissues or nerves. It however requires high skill and intricate instruments, he added.

Speaking on the occasion Dr.P.V.Vijayaraghavan, Vice Chancellor Sri Ramachandra Institute of Higher Education and Research said extensive open surgery can cause a lot of damage to tissues and nerves which is not good for the best outcome for a patient. Therefore SRMC has specialised in minimally invasive spine surgery with the best available training of its spine surgeons who are now excelling in it. SRIHER he said is seriously planning for a fellowship programme in minimally invasive spine surgery for more people in the country to specialise in it. It has already set up a specialied unit in hand surgery in the orthopedics department, he added.

Detailing the facilities created at the Centre of Excellence in Endoscopic and Minimally Invasive Surgery at SRMC, Dr. Karthik Kailash, Head of Clinical Services, Spine Surgery said SRMC has been doing minimally invasive spine surgery for the past 5 years on a regular basis. The average number of MISS surgeries performed will be approximately 250 surgeries per year. This includes MISS instrumentation techniques, Microscopic surgeries with keyhole technique and also Percutaneous Endoscopic Spine Surgery which is done under local anesthesia. All the patients will be discharged either on the same day or the day after. Our consultants have completed their fellowships in world’s renown and pioneer centres for MISS and Endoscopic spine surgery. SRMC has also acquired the latest in navigation and robotics for advancement of minimally invasive spine surgery. This technology is also available to patients under Tamilnadu govt. Chief Minister Comprehensive Health Insurance Scheme, he added.

…………………

For more information pl, contact…. Dr. K. Karthik Kailash, Head of Clinical Services, Spine Surgery, SRMC 9841008155. Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578, nallamuthu@hotmail.com; mediarelations@sriramachandra.edu.in

SRI RAMACHANDRA MEDICAL CENTRE
செய்திக்குறிப்பு Porur, Chennai-600 116. Telefax : 044-23860217 www.sriramachandra.edu.in

# ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தில் எண்டாஸ்கோப்பி மற்றும் நுண்துளை முதுகெலும்பு அறுவை சிகிச்சை திறன்மிகு மையம்

சென்னை,
20 நவம்பர் 2018

ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தில் இன்று எண்டாஸ்கோப்பி மற்றும் நுண்துளை முதுகெலும்பு அறுவை சிகிச்சை திறன்மிகு மையம் ஒன்று துவக்கப்பட்டது. துவக்க உரையாற்றிய இத்துறையின் உலகளவில் பிரபல மருத்துவரும், அமெரிக்கா, ஜார்ஜியா மாகாணத்தின் அட்லாண்டாவிலுள்ள வெல்ஸ்டார் கென்ஸ்டோன் ஹாஸ்பிடல் முதுகெலும்பு அறுவை சிகிச்சைத்துறை துணைத்தலைவர் Dr.டபன் த.ஃப்தரி துவக்கி வைத்து பேசும்போது, நுண்துளை முதுகெலும்பு அறுவை சிகிச்சையில் நரம்புகளுக்கும், திசுக்களுக்கும் எந்த பெரிய பாதிப்பும் ஏற்படாமல் சிகிச்சை அளிக்க முடிவதால் உலகெங்கும் இது வரவேற்கப்படுகிறது. ஆனால், இதற்கு, மிக உயர் திறன் பயிற்சியும், நுண் கருவிகளும் தேவை என்று கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் துணைவேந்தர் Dr. P.V. விஜயராகவன் பேசுகையில், பாரம்பரிய திறந்தவெளி முதுகெலும்பு அறுவைசிகிச்சைகளில் நரம்புகளுக்கும், திசுக்களுக்கும் அதிக பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே, ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தின் இத்துறை மருத்துவர்களுக்கு நுண்துளை அறுவை சிகிச்சையில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்துறையில் சிறப்பு படிப்பு திட்டத்தையும் துவக்க திட்டம் உள்ளது. ஏற்கனவே, முடநீக்கியில் துறையில் கை சார்ந்த சிறப்பு அறுவை சிகிச்சைக்கு தனிபிரிவு அமைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள திறன்மிகு மையத்தை விளக்கி பேசிய இத்துறைத் தலைவர், Dr. கார்த்திக் கைலாஷ் ஆண்டொன்றுக்கு சுமார் 750 முதுகெலும்பு அறுவை சிகிச்சைகளையும் சுமார் 250 நுண்துளை முதுகெலும்பு அறுவை சிகிச்சைகளையும் மேற்கொண்டு வரும் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையம், சமீபத்தில் அதிநவீன நாவிகேஷன் மற்றும் ரோபோ அறுவை சிகிச்சை தொழில்நுட்பத்தை செயல்படுத்தியிருப்பதன் மூலம் மிகத்துல்லியமாகவும், கிட்டத்தட்ட கதிர்வீச்சே இல்லாத முறையிலும் நோயாளிகளுக்கு சாதகமான செலவிலும், மிக விரைவில் குணமடைந்து வீடு திரும்பும் முறையிலும் இந்த புதிய சிறப்பு மையம் செயல்படும். இந்த சிகிச்சை தமிழக அரசின் விரிவான காப்பீடு திட்டத்திலும் செய்யப்படுகிறது என்று கூறினார்.

-----------------------------------

மேலும் விபரங்களுக்கு........Dr. K. Karthik Kailash, Head of Clinical Services, Spine Surgery, SRMC 9841008155. Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578, nallamuthu@hotmail.com; mediarelations@sriramachandra.edu.in